மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை

வடகரை கிராமத்திலுள்ள மரங்கள்

*794 வினா—**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் திருவாடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இனாம் வடகரை கிராமத்திலுள்ள 10 ஆயிரம் பனை மரங்களை வெட்டி எடுத்துக்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளதா ?

(இ) அதனைத் தடுத்து நிறுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் இந்த திருவாவடுதுறை ஆதீனத்திற்கு சொந்தமான இனாம் கிராமங்கள்—வடகரை, அரசப்பட்டி என்ற இரண்டு கிராமங்கள் 63 இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் மேஜர் இனாம் கிராமங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளன. அதை எதிர்த்து அவர்கள் கேஸ்போட்டு, ஒரு கிராமம் மைனர் இனாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அந்த கிராமத்திலுள்ள சுமார் 3,000 பனை மரங்களை போலீஸ் உதவியுடன் வெட்டியிருக்கிறார்கள். இன்னொரு ஊரிலுள்ள பனை மரங்களையும் வெட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் 300 பனை மரத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இனிமேல் வெட்டாமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? இப்பொழுது வெட்டப்பட்ட 3,000 பனை மரங்களுக்கும் நஷ்டயீடு வசூலிக்கப்படுமா ? அவர்கள் செய்த சட்ட விரோதமான செயலுக்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் இனாம் வடகரை கிராமத்தில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான சுமார் 1,500 பனை மரங்களை மரம் ஒன்றுக்கு 13 ரூபாய் வீதம் விற்பனை செய்திருக்கிறார்கள் என்பது உண்மை. அதற்குக் காரணம் அந்த மரங்கள் பலன் தரவில்லை, பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 1936-ம் ஆண்டு கும்பகோணம் துணை நீதிமன்றத்தில் இந்த ஆதீனத்திற்கு ஒரு நிர்வாகத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதன்

1974 ஏப்ரல் 9]

அடிப்படையில் அசையா சொத்துக்களை குத்தகை, விற்பனை முதலிய வில்லங்கங்களை பொது ஏலம் அல்லது டென்டர் மூலம் செய்வதற்கு உரிமை இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைச் செயல்படுத்துவதற்கு முன்னால் அறநிலையத் துறையின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். அனுமதியைப் பெருமலேயே இந்தக் காரியத்தில் அவர்கள் இறங்கியிருக்கிறார்கள். இது ஆணையரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, துணை ஆணையர் மூலமாக விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. விளக்கம் வந்தவுடன் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : இனம் ஒழிப்புச் சட்டத்தின்படி அவர்கள் பட்டா பெறவேண்டும். ஆனால் பட்டா இன்னும் பெறவில்லை. அந்த விஷயம் கோர்ட்டில் இருக்கிறது. அதற்கு முன்னலேயே பலன் தரக்கூடிய மரங்களை பட்டுவிட்டன என்று தவருகச் சொல்லி, மரங்களை வெட்டியிருக்கிறார்கள். இதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் ஒரு மரம் 50 ரூபாய்க்கு பெறுமானமுள்ளது. அதை குறைந்த ரேட்டுக்கு விற்றிருக்கிறார்கள். அதைக் கவனத்தில் கொண்டு, இந்த மோசடி எல்லாம் இனிமேல் நடக்காமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, இதற்கான கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, வெட்டப்பட்ட மரங்களுக்கான நஷ்டயீட்டுத் தொகையையும் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அனுமதி இல்லாமல் செய்திருக்கிறார்கள் என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். மேற்கொண்டு அவர்கள் இப்படிச் செய்யாமல் இருப்பதற்கு அறநிலையத் துறை மூலம் அறிவுரைகள் வழங்கப்படும். ஏற்கெனவே செய்த தவறுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-30)

திரு. கு. காமாட்சி : ஆதீனத்திற்குச் சொந்தமான அசையா சொத்துக்களை டெண்டர் மூலமாக, ஏலம் மூலமாக விற்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்றால் இதில் நஞ்சை நிலங்களும் அடங்குமா ? நஞ்சை நிலங்கள் அடங்குமானல் அது நம் சட்டத்திற்குப் புறம்பாக இருக்குமே, அதுபற்றி என்ன நிலைமை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இது எல்லா ஆதீனங்களுக்கும் பொருந்தாது. திருவாவடுதுறை ஆதீனத்தைப் பொறுத்தவரையில்தான். 1936-ஆம் வருடம் கும்பகோணம் துணை நீதி மன்றத்தில் வகுக்கப்பட்ட

நிர்வாகத் திட்டத்தின் கீழ், அவர்களுக்கு இந்த உரிமை இருக்கிறது. என்ருலும் அவர்களும் அறநிலேயத்துறையின் அனுமதிபெற்றுத்தான் இந்தக் காரியத்தைச் செய்ய முடியும். அப்படி அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனுமதி பெறவில்லே. ஆகவேதான் தக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறேன்.

முருகமங்கலம்-திருமங்கலம் சாலே.

*** 795 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முருகமங்கலத்தையும், திருமங்கலத்தையும் இணைக்கின்ற மண் சாலேயை கப்பி சாலேயாக மாற்றியமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கேள்வியிற் குறிப்பிட்ட மண் சாலே கப்பிச் சாலேயாக வெள்ளப் பாதிப்பு நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்து முடிக்கப்பட்டது.

மாயூரம்-மறையூர் சாலே.

*** 796 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்-மறையூர் சாலேயினே செப்பனிட தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாயூரம்-மறையூர் சாலேக்கு கப்பி போடும் வேலே ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டது.

Procurement of groundnuts

* 797 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Government have sought the permission of the Central Government to adopt the levy system **to** procurement groundnuts in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : (அ) ஆம்.